**கவனிக்க.**-2024.05.22 ஆந் திகதிய இல.2386 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை..

**கவனிக்க.**- இவ் வர்த்தமானியின் பகுதி VI இல் 2024 ஆம் ஆண்டுக்கான கேகாலை மாவட்டத்துக்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று தமிழ் , சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2387 - 2024 මැයි මස 31 වැනි සිකුරාදා - 2024.05.31

*2387 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 76 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, யூன் மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, யூன் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


75 - B 082575- 353 (2024/05)

# நானாவித அறிவித்தல்கள்

## மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில் (கொழும்பில் நடைபெறுகின்றது)

## குடியியல் /வர்த்தக நியாயாதிக்க அதிகாரத்தைப் நடைமுறைப்படுத்தல்

வழக்கு இல. : CHC/ 88/ 2023/CO
தன்மை: ஒடுக்குதல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 270 ஆம் பாகத்தின் XII ஆம் பிரிவின் கம்பனிகளை ஒடுக்குதல் விதிகளின் கீழ் கம்பளை, ஜயமாலபுர, நாவலப்பிட்டிய வீதி, 2 ஆம் மாடி, இல. 367/58 எனும் இடத்தில் தனது பதிவு அலுவலகத்தைக் கொண்டுள்ள எலிசியன் மிரிஸ்ஸா ( பிறைவட்) லிமிடட் (பிவி 8924) எனும் நிறுவனத்தை கலைப்பு செய்தல் பற்றிய வேண்டுகோள் தொடர்பான விடயம் தொடர்பானது.

ஜேம்ஸ் சுனிமல் சல்கோடோ,
168/6, ஸ்ரீ ஜயசுந்தர மாவத்தை,
நுகேகொடை.

*மனுதாரர்*

மேற்படி நிறுவனத்தினை ஒடுக்குவதற்காக 2023, ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி மனுவொன்றை கொழும்பில் நடைபெறுகின்ற மேல் மாகாண வாணிப மேல் நீதிமன்றத்தில் நீதிமன்ற அதிகாரத்தை நடைமுறைப்படுத்தி கொழும்பில் ( குடியியல் அதிகார எல்லைக்குள்) நடாத்தப்படும் மேல் மாகாண மேல் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதெனவும், குறித்த மனு தொடர்பான விசாரணை 2024, யூலை மாதம் 23 ஆந் திகதி நியமிக்கப்பட்டுள்ளதெனவும், அம்மனு தொடர்பில் கட்டளையொன்றை செய்வதற்காக உதவுவதற்கு அல்லது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு விரும்பும் அக்கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுத்தொகை செலுத்துநர் அந்நோக்கத்திற்காக விசாரணையின் போது தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோற்ற முடியும் எனவும், மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்துகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவு தொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஏ.டீ . ஷியாமலி ஐ. அத்துகோரல,
மனுதாராரின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி,
இல.166/1, புதுக்கடை வீதி, கொழும்பு 12.

**குறிப்பு**: அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின் போது எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு எழுத்து மூலம் அறிவித்து கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்ப வேண்டும். அறிவிக்கும் நபரின் பெயர் மற்றும் முகவரியும், கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன் நபர் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது ( சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின்) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன், 2024, யூலை மாதம் 22 ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புவதாயின் அவர்களுக்கு (மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு) மேற்குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு போதுமான காலநேரத்துடன் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

05- 313

## அல் - ஹாஷிமி சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

செயிட் அலி ஸாஹிர் மௌலானா ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "அல்- ஹாஷிமி சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த சங்கத்தைக் கூட்டிணைப்பதே இச் சட்டமூலத்தின் நோக்கமாகும்:

(அ) வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தகுதியுடையவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு உதவிகள் செய்தல்;

(ஆ) எம்மில், கல்வித் தேவைகள், சுகாதாரத் தேவைகள், ஏனைய நாளாந்த அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு அவசியமான உதவிகளைச் செய்தல்;

(இ) தமது சமூக மற்றும் கல்வி தரத்திற்கு தகுந்ததான முறையில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்,

பிறவும்.

செயிட் அலி ஸாஹிர் மௌலானா,
பாராளுமன்ற உறுப்பினர்.

05- 307

---

## ஜீகே மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

கோவிந்தன் கருணாகரம் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "ஜீகே மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த அமைப்பை கூட்டிணைப்பதே இச் சட்டமூலத்தின் நோக்கமாகும்:

1. ஆரம்ப பாடசாலைப் பருவம் முதல் பல்கலைக்கழக மட்டம் வரை கல்வி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு அனைவருக்கும் வழிகாட்டுதல் மற்றும் விசேடமாக கஷ்டப் பிரதேச கிராமங்களில் விவசாயம், பொறியியல் விஞ்ஞானம், மருத்துவ விஞ்ஞானம் மற்றும் சட்டக் கற்கைகள் போன்ற பாடப்பரப்புக்களில் கற்பதற்கு ஆர்வமுள்ளவர்களை ஊக்கப்படுத்தல்;

2. வறுமை மற்றும் பட்டினியை இல்லாதொழிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக மக்களை ஊக்கப்படுத்துவதன் ஊடாக அவர்களுக்கு சிக்கனம், சேமிப்பு மற்றும் சுயதொழில்வாய்ப்பு பற்றிய புரிந்துணர்வை வழங்குதல்;

3. குடும்ப அங்கத்தவர்களின் திடீர் மரணத்தினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்ப அங்கத்தவர்களுக்கு நிவாரணங்களை வழங்குதல் மற்றும் அவர்களின் ஈமக்கிரிகை ஏற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான உச்ச ஒத்துழைப்பை வழங்குதல்;

பிறவும்.

கோவிந்தன் கருணாகரம்,
பாராளுமன்ற உறுப்பினர்,
மட்டக்களப்பு மாவட்டம்.

05-312

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.